**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.237/2018**

**Prosecution Witness : 2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ஆண்டனிராஜ் | **Caste** | : |
| **fathers Name** | : ஜான் கென்னடி | **Calling** | : மொபைல் கடை |
| **Village** | : மேற்கு ஆரோக்கியதெரு | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 28/2026 |
| | | **Dated** | : 09.02.2026 |

**09.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–2 **திரு.ஆண்டனிராஜ்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 2ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 எதிரி இறப்பு . 2ம் எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் மேற்கு ஆரோக்கியமாதா தெருகில் குடியிருந்து திண்டுக்கல் பஸ் ஸ்டாண்டில் மொபைல் கடையில் வேலை செய்துவருகிறேன். கடந்த 08.08.2017ம் தேதி காலை 06.00 மணிக்கு காட்டாஸ்பத்திரி எதிரே உள்ள ஈஸ்வரி ஸ்டோர் அருகே நகை திருடுபோனதாக சொல்லி ஒரு பெண் திருடன் திருடன் என கத்திக்கொண்டிருந்தார். நானும் அந்த வழியாக வந்த மற்றொரு நபரும் செயினை திருடிய நபர் சென்ற இருசக்கர வாகனத்தை பின்னால் விரட்டிச்சென்றோம் ஆனால் பிடிக்கமுடியவில்லை . அதனால் மேற்படி

பெண்மணியை காவல் நிலையத்தில் புகார் அளிக்க அறிவுறித்தினோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் பேருந்து நிலையத்தில் கடையில் வேலை செய்கிறேன் என்றால் சரிதான். நான் சம்பவ இடத்திற்கு செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். போலிசார் சொல்லிக்கொடுத்துதான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.02.09 11:51:10 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.237/2018**

**Prosecution Witness : 1**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : தமிழ்ச்செல்வி | **Caste** | : | |
| **Husband Name** | : பாலசுப்பிரமணியம் | **Calling** | : | வீட்டுக்குடித்தனம் |
| **Village** | : | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **53/2026** |
| | | **Dated** | : | **09.02.2026** |

**09.02.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திருமதி.தமிழ்ச்செல்வி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 எதிரி இறப்பு . 2ம் எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் திண்டுக்கல் திருநகரில் குடியிருந்து வீட்டுக்குடித்தனம் செய்துவருகிறேன். கடந்த 08.08.2017ம் தேதி காலை 05.00 மணியளவில் எனது கணவரை வெளிநாடுசெல்வதற்காக காட்டாஸ்பத்திரி பஸ்ஸ்டாப்பில் இறக்கிவிடுவதற்காக ஆட்டோவில் சென்று எனது கணவரை இறக்கிவிட்டுவிட்டு நான் அங்கிருந்து நடந்து ஈஸ்வரிஸ்டோர் அருகே வரும்போது எனக்கு எதிரே இருசக்கர வாகனத்தில் ெ ஹல்மெட் அணிந்து வந்த ஒரு நபர் நான் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் தங்க சங்கிலியை அத்துக்கொண்டு இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்றுவிட்டார். நான் அவனைப்பார்த்து செயினை அத்துக்கொண்டு செல்கிறான் அருகில் உள்ளவர்கள் பிடிங்கள் என கத்தினேன். அருகில்

இருந்தவர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தவரை விரட்டி பாலம் வரை சென்றார்கள் ஆனால் பிடிக்க முடியவில்லை. அதனால் நடவடிக்கை எடுக்க காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு 1 மாதம் கழித்து போலிசார் நகை கிடைத்துவிட்டதாக சொன்னார்கள். நகையை கோர்ட் மூலம் மனுதாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது நகையை திருடியது ஒரு நபர் தான் அந்த நபரும் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் மனு தாக்கல் செய்து பெற்ற நகையும் திருடுபோன நகையும் வெவ்வேறு என்றால் சரிதான். தற்போது அந்த நகையை நீதிமன்றத்தில் கொண்டுவரவில்லை என்றால் சரிதான். சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றாலும் வேறு ஒரு நேரத்தில் நடந்த சம்பவத்தை போலிசார் கேட்டுக்கொண்டதற்கினங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C — Digitally signed by DINESH KUMAR C Date: 2026.02.09 11:51:17 +0530

Judicial Magistrate No.II

Dindigul.